DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai
CC 337/2019

Deposition of LW4 examined as PW 3
Dt. 01. 08. 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தாஸ் | Caste | : | |
| Father's/Husband's Name | : | ஜோசப் | Calling | : | |
| Village | : | மயிலாடுதுறை | Religion | : | |
| Taluk | : | | Age | : | 51/2023 |

(Accused called absnet)

முதல் விசாரணை

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து டி.வி சர்வீஸ் செய்யும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ எனக்கு தெரியும். எதிரி ராமனை எனக்கு தெரியும். சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. காலையில் ராஜசேகரனும், அவரது மனைவியும் இந்த வழக்கின் எதிரியான ராமன் அவரது அம்மா பாப்பாத்தியம்மாவை அடித்துவிட்டதாகவும் அதனால் காயமுற்ற அவரது அம்மாவை 108 ஆம்புலன்ஸ் மூலமாக அழைத்து செல்லும்போது தான் எனக்கு தெரியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அந்த கையெழுத்தினை தேதி ஞாபகத்தில் இல்லை 2019 ம் ஆண்டு 8 வது மாதம் மதியம் 2.00 மணியளவில் போலிசார் சம்வ இடத்திற்கு வந்து என் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக இருக்கும்படி போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க நான் சாட்சி கையெழுத்து செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. உங்கள் ஊர் என்னவென்றால் மூவலூர். அப்பா பெயர் என்னவென்றால் ஜோசப். உங்கள் தந்தை பெயர் ஜேசு என்றால் தவறு. முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். மூவலுருக்கும் சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 250 மீ. உங்கள் வீட்டிற்கும் சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் 250 மீ இருக்கும் என்றால் சரிதான். போலிசார் உங்களை விசாரணை செய்யவில்லை விசாரித்து இருந்தால் சரியான முகவரியை கொடுத்து இருப்பீர்கள் என்றால் சரியல்ல.

2. சம்பவ இடமே உங்களுக்கு தெரியாது வேறொரு வழக்கிற்காக காவல் நிலையம் சென்ற உங்களிடம் போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க சம்பவத்தை பற்றி தெரியாமல் போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க கையெழுத்து செய்து அதனை அனுசரித்து பொய்யாக சாட்சியம்

அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்களுடன் யார் யார் கையெழுத்து செய்தார்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். என்ன நடந்தது என்று உங்களுக்கு தெரியாது யார் உங்களுடன் கையெழுத்து செய்தது பற்றி தெரியாது சம்பவத்தை பற்றி உங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல. அதில் என்ன என்ன எழுதி இருந்தது என்று உங்களுக்கு தெரியாது என்றால் இல்லை படித்து காண்பித்து தான் கையெழுத்து செய்தேன். அதில் என்ன எழுதி இருந்தது என்று உங்களுக்கு தெரிந்து இருந்தால் முதல் விசாரணையில் சொல்லியிருப்பீர்கள் தெரியாததால் தான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3. சாட்சியாக போட்டப்பட்டுள்ள தாஸ் என்பவர் நீங்கள் கிடையாது வேறொருவர் தாஸ் அதனை மறைத்து போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. விசாரிக்கப்பட்ட தாஸ் நீங்களாக இருந்து இருந்தால் உங்களுடன் கையெழுத்து செய்த நபரை பற்றி சொல்லி இருப்பீர்கள் என்றால் சரியல்ல. போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றாலும், போலிசார் காவல் நிலையத்திற்கு வரவைத்து கையெழுத்து வாங்கி கொண்டு அதனை அனுசரித்து முன்னுக்கு பின் முரணாக எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.